V11T

விருதுநகர் மாவட்டம்

முதல் இடைப் பருவ பொதுத் தேர்வு - 2024

-----

வகுப்பு 11

நேரம் : 1.30 மணி **பொதுத்தமிழ்** மதிப்பெண்கள்: 50

**I. பலவுள் தெரிக:** **10×1=10**

1) பாயிரம் இல்லது .............. அன்றே.

அ) காவியம் ஆ) பனுவல் இ) பாடல் ஈ) கவிதை

2) மொழி முதல் எழுத்துகளின் அடிப்படையில் முறையானதைக் கண்டுபிடிக்க.

அ) அன்னம், கிண்ணம் ஆ) டமாரம், இங்ஙனம்

இ) ரூபாய், லட்சாதிபதி ஈ) றெக்கை, அங்ஙனம்

3) வம்சவிருத்தி என்னும் சிறுகதைத் தொகுப்பின் ஆசிரியர்

அ) சு. வில்வரத்தினம் ஆ) வால்ட் விட்மன்

இ) அ. முத்துலிங்கம் ஈ) ஜெயமோகன்

4) பொருத்தமான இலக்கிய வடிவம் எது?

அ) ஏதிலிக்குருவிகள் - மரபுக்கவிதை

ஆ) திருமலை முருகன் பள்ளு - சிறுகதை

இ) யானை டாக்டர் - குறும்புதினம்

ஈ) ஐங்குறுநூறு - புதுக்கவிதை

5) "வான் பொய்த்தது" என்ற சொற்றொடர் உணர்த்தும் மறைமுகப் பொருள்

அ) வானம் இடிந்தது ஆ) மழை பெய்யவில்லை

இ) வானம் என்பது பொய்யானது ஈ) மின்னல் வெட்டியது

6) உலக சிட்டுக் குருவிகள் நாள்

அ) ஜூன் 5 ஆ) ஏப்ரல் 20 இ) மார்ச் 20 ஈ) மார்ச் 22

7) காவடிச் சிந்துக்குத் தந்தை என்று அழைக்கப்படுபவர் யார்?

அ) பாரதிதாசன் ஆ) அண்ணாமலையார்

இ) முருகன் ஈ) பாரதியார்

8) **பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்க:**

1. வெள்ளிவீதியார் - அ) புறநானூறு
2. அண்ணாமலையார் - ஆ) சி.சு. செல்லப்பா
3. வாடிவாசல் - இ) குறுந்தொகை
4. இளம்பெருவழுதி - ஈ) காவடிச்சிந்து

(i) அ ஆ இ ஈ (ii) ஆ ஈ அ இ (iii) இ ஈ ஆ அ (iv) இ ஈ அ ஆ

9) பகுபத உறுப்புகளுள் இடம்பெறும் அடிப்படை உறுப்புகள் எவை?

அ) பகுதி, விகுதி ஆ) பகுதி, இடைநிலை, சாரியை

இ) பகுதி, சந்தி, விகாரம் ஈ) பகுதி, இடைநிலை, சந்தி, சாரியை, விகுதி, விகாரம்

10) காட்டின் மூலவர் என அழைக்கப்படும் உயிரினம்

அ) சிட்டுக்குருவி ஆ) மண்புழு இ) யானை ஈ) காளை

**II. குறுவினா (எவையேனும் நான்கனுக்கு விடையளி):** **4×2=8**

11) இனம், மொழி குறித்த இரசூல் கம்சதோவ் பார்வையைக் குறிப்பிடுக.

12) தமிழ்நாட்டின் மாநிலமரம் - சிறுகுறிப்பு வரைக.

13) காற்றின் தீராத பக்கங்களில் எது எதனை எழுதிச் சென்றது?

14) "கோட்டை" என்னும் சொல் திராவிட மொழிகளில் எவ்வாறு எடுத்தாளப்பட்டுள்ளது?

15) தமிழர்கள் புகழ், பழி ஆகியவற்றை எவ்வாறு ஏற்றதாகப் புறநானூறு கூறுகிறது?

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



III. மொழிப்பயிற்சி இலக்கணம்: 4×2=8

(எவையேனும் நான்கனுக்கு விடையளி)

16) தமிழாக்கம் தருக:

i) The pen is mighter then the sword.

ii) Education is the power full weapon, which you can use to change the world.

17) பிறமொழிச் சொற்களை தமிழாக்கம் செய்க:

(i) பாஸ்போர்ட் (ii) கோரிக்கை

18) தொடரில் உள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி இரண்டு சொற்றொடர்களாக்குக:

பள்ளிக்கூடம் எல்லாம் தருபவை ஒவ்வொரு கலைகள் குழந்தையும் போக வேண்டும் மகிழ்ச்சி.

19) மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக:

கனை, கணை

20) வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக:

குமரனை பற்றி தெரிந்துக் கொள்ள வேண்டுமா? என் வீட்டிற்கு வருகைத் தாருங்கள். என் வீட்டிற்கு பக்கத்து வீடுதான் குமரனது வீடு.

21) உயிரீறு, மெய்யீறு - விளக்குக.

IV. சிறுவினா: (இரண்டு மட்டும்) 2×4=8

22) சு. வில்வரத்தினம் பாடத்தான் வேண்டும் என எவற்றைக் குறிப்பிடுகிறார்?

23) ''சலச வாவியில் செங்கயல் பாயும்'' - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

24) வேதிக்கலப்பில்லாத பூச்சிக்கொல்லி நடைமுறைக்குச் சாத்தியமா?

25) 'மலை மனித வாழ்வில் சிறப்பிடம் பெற்றுள்ளது' - என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

V. நெடுவினா (இரண்டிற்கு மட்டும் விடையளி): 2×6=12

26) அ) நீங்கள் மொழியை வெளிப்படுத்தும் நிலையில் பேச்சுமொழியையும் எழுத்து மொழியையும் எவ்வாறு உணர்கிறீர்கள் என்பதை விவரிக்க.

(அல்லது)

ஆ) திருமலை முருகன் பள்ளு கூறும் வடகரை, தென்கரை நாட்டுப் பாடல்கள் வழி இயற்கை வளங்களை விவரிக்க.

27) அ) யானை டாக்டர் கதை வாயிலாக இயற்கை, உயிரினப் பாதுகாப்பு ஆகியவை குறித்து நீவிர் அறிந்தவற்றைத் தொகுத்து எழுதுக.

(அல்லது)

ஆ) வாடிவாசல் கதை வாயிலாக நீங்கள் உணர்ந்த கருத்துக்களை விளக்குக.

VI. அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக: 1×4=4

28) ''உண்டால் அம்ம'' எனத் தொடங்கும் புறநானூறுப் பாடல்.

----------

OPPO A53 2024/08/10 20:14

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com